

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற வீரவணக்கநாள் பொதுக்கூட்டம் கழக கொள்கை பரப்பு செயலாளர் திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை ஆற்றினார். உடன் அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான கே.ஆர். பெரிய கருப்பன் , முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன், மாநில மாணவரணி இணை செயலாளர் பூரண சங்கீதா , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.



மதுரை வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பாக மேலூரில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றிய போது எடுத்த படம். உடன் தலைமை கழக பேச்சாளர்கள் முனைவர் பொன்னேரி சிவா, வயலூர் கிருஷ்ணமூர்த்தி, கழக நிர்வாகிகள் எஸ்.ஆதிசங்கர், முகமது யாசின், கிருஷ்ணமூர்த்தி, குமரன், ராஜராஜன், பாலகிருஷ்ணன், கதிரவன், முரளிதரன், சிறைச்செல்வன், பால்பாண்டியன், நேரு பாண்டியன், கலை கார்த்திகேயன், வடிவேல் முருகன் மற்றும் மாணவர் அணி துணை அமைப்பாளர்கள், திரளான கழகத்தினர், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 3ஆம் பக்கத் தொடர்ச்சி

வளர்ச்சியைத் தடுக்க மாநில சுயாட்சியைச் சிதைக்கிறார்கள்!

**ஒன்றிய அரசின் பண்பாட்டுப் படையெடுப்பு! அஞ்சாமல் செயலாற்றும் தி.மு.க. அரசு!**

கூட்டாட்சிக்கு வேட்டு வைக்கிறார்கள்! இந்தி மொழியை அனைத்து இடத்திலும் ஆதிக்க மனப்பான்மையுடன் திணிக்கிறார்கள். நிதியைத் தர மறுக்கிறார்கள். மொத்தத்தில் தமிழ்நாட்டின் மீது, அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டுப் படையெடுப்பை ஒன்றிய பா.ஜ.க. அரசு நடத்திக் கொண்டு இருக்கிறது. அதற்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகம் எந்த மிரட்டலுக்கும் அஞ்சாமல்போராடிக்கொண்டு இருக்கிறது.

அதனால்தான் சொல்கிறேன்... மொழிப்போர் இன்னும் முடியவில்லை. இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது!

**மொழிப் போராட்டம் முடியவில்லை! தொடங்குகிறது!**

எவ்வாறு சொல்கிறேன் என்றால்... ஒன்றிய அரசுப் பணிகளுக்கு இந்தி தெரிய வேண்டும் என்று சொல்வது; ‘பொதிகை’ தொலைக்காட்சி நிலையத்தில் இந்தி மாதம் கொண்டாடுவது அங்கு, தமிழ்த் தாய் வாழ்த்தில் திராவிட நல்திருநாடும் என்ற சொல்லைத் தவிர்த்துவிட்டுப் பாடுவது; நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பும் கடிதங்களுக்கு இந்தியில் பதில் அனுப்புவது; அலுவல் மொழிக்கான நாடாளுமன்றக் குழு அறிக்கையில் ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்.இல் பயிற்று மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்று பரிந்துரைப்பது என்று மொழிப்போர் இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

மொழிச் சிதைந்தால் இனம் சிதையும்! இனம் சிதைந்தால், நம்முடைய பண்பாடே சிதைந்து விடும்! பண்பாடு சிதைந்தால், நம்முடைய அடையாளம் போய்விடும்! அடையாளம் போனால், தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் தகுதியையே இழந்துவிடுவோம்! தமிழன் என்ற தகுதியை இழந்தால், நாம் வாழ்ந்தும் பயனில்லை! எனவே, மொழியையும் இனத்தையும் நாட்டையும் காக்க வேண்டும்! இந்த மூன்றையும் காக்கும் கழகத்தைக் காக்க வேண்டும்! கழகம் உருவாக்கிய ஆட்சியைக் காக்க வேண்டும்!

அன்றைக்கு மாணவர்களும் இளைஞர்களும் இணைந்து தமிழைக் காத்தார்கள். இன்றைக்கு அந்த மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் இந்த மேடையில் இருந்து ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய பல்கலைக் கழங்களை மாநில அரசுகளிடம் இருந்து பறிக்கும் ஆபத்தை முறியடிக்க, நம்முடைய மாணவரணி சார்பில் தலைநகர் டெல்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து, மாபெரும் போராட்டம் நடைபெறும்.!

அன்றைக்கு, மொழிப்போரில் ஈடுபட்டு, இந்தி பேசாத மாநிலங்களின் மொழிகளை எல்லாம் காப்பாற்றினோம். இன்றைக்கு, கல்வி உரிமைப் போரில் ஈடுபட்டு, இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களின் கல்வி உரிமையையும் காக்க கழக மாணவரணியினர் முன்கள வீரர்களாக டெல்லியில் திரளுவார்கள். கல்வி உரிமையையும் மாநில உரிமைகளையும் காப்போம்!

வரும் 2026ஆம் ஆண்டு நடக்க இருக்கும் சட்டமன்றத் தேர்தல், கொள்கை வாதிகளாக இருக்கும் நமக்கும் கொத்தடிமைக் கூட்டமாக இருக்கும் அ.தி.மு.க.விற்கும் நடக்கும் தேர்தல். மறந்துவிடாதீர்கள்!

தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் முன்னேற்றிய தி.மு.க. விற்கும் தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் அடமானம் வைத்த அ.தி.மு.க.விற்கும் நடக்கும் தேர்தல்.

2019 முதல் நடந்த அனைத்துத் தேர்தலிலும் தொடர்ச்சியாக வென்றிருக்கிறோம்.

**தலைவர் கலைஞருக்குப் புகழ் சேர்க்கும் - நமது தொடர் வெற்றிகள்!**

தலைவர் கலைஞர் நம்மை விட்டுப் பிரிந்த பின் நாம் சந்தித்த எல்லாத் தேர்களிலும் வென்று நாம் கலைஞர் அவர்களுக்குப் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இது தொடரும்! நான் உறுதியாகச் சொல்கிறேன்.

தொடர்ந்து நான் ஒவ்வொரு மாவட்டமாக, சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கே சந்திக்கும் மக்கள் முகங்களை எல்லாம் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

2026 தேர்தலிலும் நாம்தான் வெல்வோம்! ஏழாவது முறையும் ஆட்சி அமைத்து ஏற்றம் காண்போம்!

- மொழிப்போர் மறவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் இந்த நேரத்தில் உறுதியேற்போம்! உறுதியேற்போம்! உறுதியேற்போம்!

இங்ஙனம் மொழிப்போர்ப் தியாகிகள் வீரவணக்க நாள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




வேலூரில் நடந்த மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்தில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. பேசிய போது எடுத்த படம். இதில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி முன்னாள் அமைச்சர் டாக்டர் வீ.எஸ்.விஜய் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலு விஜயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. - க.தேவராஜி எம்.எல்.ஏ. - எ.ராஜசேகர் - தாவூத் அபூபக்கர் சிறப்புரை!

# திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.மாணவரணி சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாணவரணி மாவட்ட அமைப்பாளர் தே.பிரபாகரன் தலைமை தாங்கினார்!

*திருப்பத்தூர்,ஜன,27*

திருப்பத்தூர் மாவட்ட திமுக மாணவரணி சார்பில் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் வாணியம்பாடியில் நடைபெற்றது. மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு மாணவரணி மாவட்ட அமைப்பாளர் தே.பிரபாகரன் தலைமை தாங்கினார்.

மாநில செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமைக் கழக பேச்சாளர்கள் எ.ராஜசேகர், தாவூத் அபூபக்கர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

நகர கழக செயலாளர் சு.ராசேந்திரன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன், மாவட்ட அவைத் தலைவர் ஆர். எஸ். ஆனந்தன்,

மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், சாந்தி சீனிவாசன்,

மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், நகர மன்ற, ஒன்றிய குழு, பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன் பிறப்புகள், மாணவர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

முடிவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் டி.சி. கார்த்தி நன்றி கூறினார்.

# விழுப்புரம் மாவட்டத்தில் இன்றும் நாளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு செய்கிறார்!




தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 27.01.2025 திங்கட்கிழமை | மாலை 4.00 மணி | 1 | தியாகராயர் நகர் | அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம், கோடம்பாக்கம் பவர் ஹவுஸ், சென்னை. |
| 28.01.2025 செவ்வாய்க்கிழமை | மாலை 4.00 மணி | | மயிலாப்பூர் | சமுக நலக்கூடம், கே.பி.தாசன் சாலை, தேனாம்பேட்டை, சென்னை. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 25-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி